
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1163**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

**58**

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்



# சிறுபான்மையினர் வாக்கு மட்டுமல்ல; வாழ்வும் கழகத்தோடுதான்!

திராவிட மாடல் 2.0 ஆட்சி சிறுபான்மையினருக்கு என்ன செய்யக் காத்திருக்கிறது என்பதை, கடந்த வாரம் பார்த்தோம். ஆனால், 'வாக்குகளைப் பெறுவதற்காகச் சிறுபான்மையின மக்களுக்கு ஆசை வார்த்தைகள் கூறுகிறார் ஸ்டாலின்' என அதை விமர்சனம் செய்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. சிறுபான்மையின மக்களுக்குத் துரோகம் இழைப்பது ஒன்றையே வழக்கமாகக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர், அடிப்படையில் இப்படிப்பட்ட விமர்சனங்களை வைப்பதற்கே தார்மீக உரிமையற்றவர். என்றாலும்கூட, அவருடைய விமர்சனத்தில் அடிப்படை உண்மையோ, அரசியல் முகாந்திரமோ இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயம் இல்லை. தி.மு.க.வை ஆதரிக்கும் சிறுபான்மை மக்கள் சிந்திக்க வேண்டும் என்றும், அவர் கூறியிருக்கிறார். கடந்த ஐந்து ஆண்டுகளில் திராவிட மாடல் அரசால் சிறுபான்மையின மக்கள் அடைந்த பயன்களை அவர்கள் சிந்திக்காமல் இருக்கப்போவதில்லை. அவர்களின் சிந்தனைகளைக் கிளற சில சாதனைகளைப் பட்டியலிடுவது பொருத்தமாக இருக்கும்.

கழகத்தோடு உறுதியாகக் கரம் கோத்து நிற்கும் சிறுபான்மையின மக்களுக்கு கடந்த 5 ஆண்டுகளில் என்ன சாதனைகளையெல்லாம் திராவிட மாடல் அரசு செய்திருக்கிறது என்ற புள்ளிவிவரங்களை அடுக்கினால், எடப்பாடி பழனிசாமி நிச்சயம் தலைசுற்றிப்போவார் என்பது மட்டும் உறுதி. சீர்மரபினர் நல வாரியம் மற்றும் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியங்களில் பதிவுசெய்துள்ள உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித்தொகை ஆண்களுக்கு ரூ.2,000-ஆக இருந்ததை ரூ.3,000ஆகவும், பெண்களுக்கு ரூ.2,000-லிருந்து ரூ.5,000ஆகவும் உயர்த்தினார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் சென்னை, வேலூர், விழுப்புரம். திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 5 மாவட்டங்களில், புதிய பணியிடங்களுடன் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 'டாம்கோ' மூலம் சிறுபான்மையினர் திராவிட மாடல் அரசில் பெற்றுள்ள வரலாறு காணாத பயன்களையும் ஏற்கெனவே பட்டியலிட்டுள்ளோம். கல்வி, வழிபாட்டுத் தலங்கள், வக்ஃப் சொத்துகளைப் பாதுகாக்க, திராவிட மாடல் அரசு செய்துள்ள சாதனைகள் சிலவற்றைக் காண்போம்.

### வழிபாட்டுத் தலங்கள் சீரமைப்பு

தமிழ்நாட்டின் மத நல்லிணக்கச் சூழலுக்கு மிக முக்கியமான அடையாளமாகத் திகழ்வது நாகூர் தர்கா. சாதி, மத பேதமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் வந்து செல்லும் வழிபாட்டுத்தலம். முஸ்லிம்கள் மட்டுமன்றி, இந்துக்கள் மற்றும் கிறிஸ்துவர்களும் பெருமளவில் இங்கு வந்து வழிபாடு செய்கின்றனர். தமிழ்நாட்டின் பண்பாட்டு அடையாளமாகவும், ஒற்றுமையின் இருப்பிடமாகவும் திகழும் இந்த தர்காவை சீரமைக்கவோ, மேம்படுத்தவோ அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பெரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், 2022-2023-இல் நாகூர் தர்காவைச் சீரமைக்க 2 கோடி ரூபாய் ஒதுக்கியது திராவிட மாடல் அரசு. தமிழ்நாடு முழுவதும் பல்வேறு தொன்மையான தர்காக்கள் இவ்வாறு சீரமைக்கப்பட்டுள்ளன. 2025-26-இல் மட்டும் இதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பள்ளிவாசல் மற்றும் தர்காக்களைச் சீரமைப்பதற்கான மானியத் தொகையையும் ரூ.10 கோடியில் இருந்து ரூ.15 கோடியாக உயர்த்தியுள்ளார் முதலமைச்சர்.

### வக்ஃப் உரிமைகள் பாதுகாப்பு

வக்ஃப் சொத்துகளைக் குறிவைத்து வேட்டையாடத் துடிக்கும் பாசிச பா.ஜ.க.வின் கொடுங்கோலாட்சிக்கு மத்தியில், தமிழ்நாட்டில் வக்ஃப் சொத்துகளைப் பாதுகாக்க எண்ணற்ற முயற்சிகளை, இந்த 5 ஆண்டுகளில் மேற்கொண்டிருக்கிறார் முதலமைச்சர்.

> மாறாக, திட்டங்களாலும் தீர்க்கமான கொள்கை முடிவுகளாலும் சிறுபான்மையினச் சமூகத்தின் நம்பிக்கையை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, இன்னும் வலுவாகப் பெற்றிருக்கிறது கழகம்.

தமிழ்நாட்டில் உள்ள வக்ஃப் சொத்துகளைக் கண்டறிந்து பாதுகாக்கும் பொருட்டு, நவீன நில அளவைக் கருவிகளும் (DGPS ROVER) மற்றும் நில அளவையர்களும் நியமிக்கப்பட்டு, நில அளவைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வக்ஃப் சொத்துகளை அளவை செய்வதற்காகவும், 11 மண்டல அலுவலகங்களுக்கு 11 கணினி மற்றும் கணினி உபகரணங்கள் வாங்குவதற்காகவும் ரூ.1.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 3 ஆயிரத்து 80 வக்ஃப் நிறுவனங்களுக்குப் பாத்தியப்பட்ட 10 ஆயிரத்து 961 ஏக்கர் நிலங்கள் நில அளவை செய்யப்பட்டுள்ளன. 2024-25 நிதியாண்டில் மட்டும் 100 வக்ஃப் நிறுவனங்களின் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்காக 10 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது தமிழ்நாடு அரசு. ஆனால், இந்த ஆண்டில்தான் வக்ஃப் வாரிய திருத்த மசோதாவைக்கொண்டு வந்து, வக்ஃப் சொத்துகளுக்குப் பெரும் ஆபத்தை உருவாக்கியது பா.ஜ.க. அரசு. அதற்கெதிரான அரசியல் - சட்டப் போராட்டங்களுக்கு மத்தியில், தமிழ்நாட்டில் வக்ஃப் சொத்துகளைப் பாதுகாப்பதற்கான செயல்பாடுகளையும் சத்தமில்லாமல் மேற்கொண்டு வருகிறது நம் அரசு. பூந்தமல்லி, வேலூர், இராமநாதபுரம், கடலூர் மாவட்டங்களில் 4 வக்ஃப் சரக அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### தொய்வில்லாத கல்விச் சேவை

வறுமை மற்றும் குடும்பச் சூழல் காரணமாக கிராமப்புறங்களில் வசிக்கும் சிறுபான்மையின சமூக மாணவிகள் கல்வியில் இருந்து வெளியேறுவது, அகில இந்திய அளவில் மிக அதிகம். தமிழ்நாட்டிலும் அத்தகைய சூழல் ஏற்பட்டுவிடக் கூடாது, மாணவிகளின் கல்வி மிக முக்கியம் என்பதை உணர்ந்து, கிராமப்புற சிறுபான்மையின மாணவியர் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில்வதற்கு ஏதுவாக, 3 முதல் 6-ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை 2022-இல் தொடங்கியது திராவிட மாடல் அரசு. இத்திட்டத்தில் 3 முதல் 5-ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் 500 ரூபாயும், 6-ஆம் வகுப்பு மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுகிறது. இலட்சக்கணக்கான சிறுபான்மையின மாணவிகள் இத்திட்டத்தால் பயன்பெற்று, இடைநிற்றலைத் தவிர்த்து வருகின்றனர்.

மத மற்றும் மொழிச் சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் யாவும் இந்தியாவில் பா.ஜ.க. ஆளும் பல மாநிலங்களில் கடுமையான நெருக்கடிகளுக்கு உள்ளாகி வரும் வேளையில், தமிழ்நாட்டில் 370 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையின அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள் 314 கல்வி நிறுவனங்களுக்கு மதவழிச் சிறுபான்மையினர் அந்தஸ்து மற்றும் 56 கல்வி நிறுவனங்களுக்கு மொழிவழிச் சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்கப் பட்டுள்ளன. இவை தவிர, சென்னை, கோவை, கடலூர், புதுக்கோட்டையில் சிறுபான்மையினர் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. 10 முஸ்லிம் மாணவ, மாணவியர் வெளிநாடுகளில் பட்ட மேற்படிப்பு மேற்கொள்ள ஆண்டுக்கு ரூ.36 இலட்சம், தமிழ்நாடு வக்ஃப் வாரியம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

சிறுபான்மையினருக்கு எதிராக ஓரவஞ்சனை காட்டும் ஒன்றிய அரசுக்கு எதிராகக் குரல் கொடுக்காமல், ஒன்றிய அரசின் சிறுபான்மையின விரோதச் செயல்கள் அனைத்துக்கும் முட்டுக்கொடுத்து, அந்தக் கட்சியில் இருக்கும் மிச்ச சொச்ச சிறுபான்மையினரையும் நம்பிக்கையிழக்கச் செய்து, வெளியேற வைத்திருக்கும் எடப்பாடி பழனிசாமி, 'சிறுபான்மையின மக்களுக்கு ஆசைவார்த்தை கூறுகிறது தி.மு.க.' என்று சொல்ல எந்த உரிமையும் இல்லை.

மாறாக, திட்டங்களாலும் தீர்க்கமான கொள்கை முடிவுகளாலும் சிறுபான்மையினச் சமூகத்தின் நம்பிக்கையை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, இன்னும் வலுவாகப் பெற்றிருக்கிறது கழகம். சிறுபான்மையினர் வாக்கு மட்டுமல்ல, வாழ்வே கழகத்தோடுதான் என்பது, இத்தேர்தல் முடிவுகளில் நிச்சயம் எதிரொலிக்கத்தான்போகிறது. மே 4-ஆம் நாள், எடப்பாடி பழனிசாமியும் அவரது அடிமைக் கூடாரமும் அதை உணரத்தான் போகிறார்கள்.

...நீளும்

## தி.மு.க. தலைமையிலான அணிக்குப் பெருகும் ஆதரவு!

'தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களிப்போம் என அறைகூவல் விடுத்திருக்கின்றன, பல்வேறு தீவிர இடதுசாரி முற்போக்கு இயக்கங்கள். 'தமிழ்த்தேச மக்கள் முன்னணி', 'பாட்டாளி வர்க்க சமரன் அணி', 'மக்கள் அதிகாரம்' உள்ளிட்ட பல்வேறு இயக்கத்தினர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ஒன்றிய அரசானது ஒரே தேசம், ஒரே மதம், ஒரே மொழி, ஒரே சந்தை என்ற நோக்கில் இந்து, இந்தி, இந்து ராஷ்டிரம் என்ற திசையில் இந்நாட்டை இழுத்துச்செல்கிறது. அம்பானி – அதானி ஆகிய இருபெரும் மேற்கு இந்திய கார்ப்பரேட்டுகளும் மோடி – அமித் ஷா ஆகிய இருவரும் உள்ளடங்கிய ஒரு சிறு கும்பலின் ஆட்சியாக இவ்வாட்சி நடந்துகொண்டிருக்கிறது. தேர்தல் ஆணையம், நீதித்துறை, ஊடகம், ஆர்.பி.ஐ., நிதி ஆயோக், நிதி ஆணையம், அமலாக்கத்துறை, என்.ஐ.ஏ, அமைச்சரவை, மாநிலங்களவை, மக்களவை, நாடாளுமன்ற நிலைக் குழுக்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற சனநாயக நிறுவனங்கள் கைப்பற்றப்பட்டு, தலைமை அமைச்சர் அலுவலகத்தில் அதிகாரம் குவிக்கப்படுகின்றது.

அது மட்டுமல்ல, மாநிலங்களின் அதிகாரத்தை மென்மேலும் பறிப்பதன் வழியாகவும், மாநில சட்டப்பேரவைகளைக் கைப்பற்றுவதன் மூலமாகவும் பாசிச அதிகாரத்தை ஆழ ஊன்றச் செய்து, விரிவாக்கி, உறுதியாக்குவதற்கான களமாகச் சட்டப்பேரவைத் தேர்தல்களை பா.ஜ.க. பாவிக்கிறது. இந்தத் தேர்தலில், தமிழ்நாட்டு மக்கள் பா.ஜ.க.வினருக்கு சட்டப்பேரவைக்குள் இடம் கொடுக்கவில்லை, முழுவதுமாகக் கதவடைத்துவிட்டார்கள் என்ற தேர்தல் முடிவை அடைவதுதான் பாசிச எதிர்ப்பு சனநாயக ஆற்றல்களின் முதன்மை இலக்காக இருக்க வேண்டும். ஆகவே, பாசிச பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட்டணியைத் தோற்கடிப்போம்! தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களிப்போம்!" என்று நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ஃப்ளாஷ்பேக்



### மறக்க முடியாத பொற்காலம்!



மானா பாஸ்கரன்

1986-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் திருவாரூரில், முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா மன்னை நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கோ.சி.மணி, திருவாரூர் கு.தென்னன் ஆகியோர் கலந்துகொண்ட அந்தப் பிறந்தநாள் விழா கவியரங்கில் நான் கவிதை வாசித்தேன். என் கவிதையை ரசித்த மன்னையார், தனது சட்டைப் பையில் இருந்து பத்து ரூபாயை எடுத்துக் கொடுத்து, என்னைப் பெருமைப்படுத்தினார். நாற்பதாண்டுகளுக்கு முன்னர், தலைவரைப் பாடிய அந்த நினைவு, மறக்க முடியாத பொற்காலம்.

**– மானா பாஸ்கரன், பத்திரிகையாளர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### வரலாற்று முழக்கம்!

1962-ஆம் ஆண்டு மார்ச் 20-ஆம் தேதி, மாநிலங்களவைக்கு பேரறிஞர் அண்ணாவும், கழகத்தின் ஆதரவுடன் சுதந்திரா கட்சியின் பெ.ரத்தினசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மே மாதம் 1-ஆம் தேதி முதன்முதலாக அண்ணாவின் குரல் நாடாளுமன்றத்தில் ஒலித்தது. 'தெருவோரத்து மனிதர்களின் பிரதிநிதியாக வந்திருக்கும் நான், திராவிட இனவழி வந்தவன்' என அன்று தொடங்கிய அண்ணாவின் முழக்கம், வரலாற்றுப் புகழ்மிக்கது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900